

படைப்பு

கவிதை

# மின்னிதழ்

பதிப்பு 22 தேதி 01-06-2018

# மீனாகும் கருவாடு

கருணையின்றிப் பொழியும் வெயிலை
வேம்பின் கிளையொன்று தழுவும்
மதிற்சுவர் மேலிருக்கும் பூனை
தம் முன்னங்காலால் புறந்தள்ளுகிறது

இன்று தயிர்சோற்றில் புளிப்பு கூடுதலாய் இருந்ததை
நினைத்துக் கொள்கிறது
விழி திறத்தலையும் இமை மூடலையும்
செல்லமாய்ப் போராடிக் கையாள்கிறது
கொழுத்த கருவாடொன்று நினைவில் மோத
மீசையில் உரசும் வண்ணம் நா சுழற்றுகிறது

மதிற்சுவரோரம் அமர்ந்திருப்பவனை
ஒரு மியாவ் அனுப்பி
அச்சுறுத்தவோ சிநேகிக்கவோ முயல்கிறது
மேலெழும்பும் பீடிப் புகையிலிருக்கும்
கஞ்சா மணம் கிறக்கமூட்டுகிறது

அருகாமைச் செடிக்கு ஒருவர்
தண்ணீர் வார்த்துப் போகிறார்
மலரும் செடியின் மூச்சுக்காற்று
பூனையின் சுவாசத்தில் சேர்கையில்
நினைவில் கிடந்த கருவாடு
மீனாய்த் துள்ளிக்குதித்து
வேரடி நீரில் பிரியம் பகிர்கிறது.

**ஈரோடு கதிர்**



எட்டு வயதில் காசில்லை என்று
வெளியே விரட்டி விட்டு
கரகாட்டக்காரன் படம்
பார்த்தார்களே அப்போது கண்டேன்
முதல் மரணத்தை...

உறவினர்கள் அனைவருக்கும்
துணி எடுத்து விட்டு
பத்து வயது சிறுவன் நான்
நடுவில் அமர்ந்திருப்பதை
கண்டுகொள்ளாமல்
சந்தோசம் பகிர்ந்தார்களே.. அப்போது
இரண்டாவது மரணம்...

ஊரே திருவிழாவுக்கு
குடும்பத்தோடு போகையில்
நான் மட்டும்
எதிர் வீட்டுத் திண்ணையில் தனியே
சுருண்டு கிடந்தேனே
அது 14 வயது மரணம்...

யாரோ செய்த தவறுக்கு
காரணமே இல்லாமல் பொய்
சாட்சியங்கள் கூடி
என் 18 வயதை சிதைத்த
முரண்பட்ட மரணத்தை
இன்னும் உணர்கிறேன்...

நண்பன் என்று நம்பியவன்
வீட்டு வரண்டாவில் வைத்து
சோறு போட்டு, இன்று
பிச்சைக்காரர்களுக்கும் இல்லாதவர்களுக்கும்
சோறிடுவது நலம் என்றானே...
அது 25 வயது மரணம்...

உயிர் என்று சொல்லி
ஆன்மாவுக்குள்
புதைந்து பின் ஒரு நாளில்
வெறும் பெயராகிடும்
புள்ளிக்குள் அவள் நின்று விட்டபோது
மிச்ச மரணத்தோடு
வெறித்தேன் எனது 30 வயதை...

இன்னும் இன்னும் நிரம்ப
ததும்ப வந்து சேரும் மரணத்துக்கு
ஒத்திகை பார்த்து ஒய்யாரமாய்
ஒடுங்கி நடுங்குகிறது
இதோ இந்த வயதும்....

**கவிஜி**

யாரும் யாருக்கும் செய்யக்கூடியது தான்
ஆயினும்
நீ இதை செய்திருக்க வேண்டாம்!!

அத்தனை நம்பிக்கையையும்
ஒரே நொடியில் போட்டுடைத்திருக்க
வேண்டாம்..

எல்லாம் நீயென நம்பியிருந்த மனதொன்றை
கருணையின்றி கொலை செய்திருக்க
வேண்டாம்..

விலக ஏதுவாய் காரணங்கள் தேடி
உனக்காய் பூத்து நின்ற புன்னகைதனை
புறந்தள்ளியிருக்க வேண்டாம்..

சேர்ந்து கண்ட கனவுகளை தீயிட்டுக் கொளுத்தி
யாரோ போல
நகர்ந்திருக்க வேண்டாம்..

நேசமொன்றின் மிகச்சிறிய வேண்டுதல்களையும்
நிர்கதியில் நிற்க வைத்து
நிரந்தரமாய் பிரிந்திருக்க வேண்டாம்..

இன்னும்
இத்தனை கொடூரமாய் ஒரு பிரிவு
நிகழ்ந்திருக்கவே வேண்டாம்...

தவிர
இது யாரும் யாருக்கும் செய்யக்கூடியது தான்
ஆயினும்
நீ இதை செய்திருக்க வேண்டாம்!!!

**ரிஸ்கா முக்தார்**



பொல்லாத மனிதரெல்லாம்
பூமியாள வந்துவிட்டால்
கல்லுக்கும் பொட்டுவச்சு
கடவுளென்று சொல்லி வைப்பான்.....
இல்லாத கடவுளுக்கு இராப்பகலா பொங்கல்வச்சு
ஏழைகளின் மனசமட்டும்
எப்போதும் பொங்க வைப்பான்
பிழைக்க ஒரு வழியுமில்லை
பின்புலமும் ஏதுமில்லை
பசிக்கு சோறுமில்லை
படுத்துறங்கப் பாயுமில்லை
ஆகாரமில்லாமல் அவன் குடும்பம் தத்தளிக்க
போகாத ஊருக்கு பொழப்புத்தேடி போயிருக்கான்
உசுரு பொழச்சிருக்க ஒருவேளை சோறுதின்று
அடிவயிற்றில் நெருப்பைக்கட்டி
அவன்குடும்பம் காத்திருக்க
மரணத்தின் திசைநோக்கி
மலையேறிப் போயிருக்கான்
பொழைச்சிருந்து திரும்பிவந்தா
புள்ளைகளின் வயிறடையும்
பொணமாத் திரும்பிவந்தா
பொண்டாட்டி வயிறெரியும்
துக்கத்தை துணைக்கழைத்துத்
தொலைதூரம் போயிருக்கான்
வறுமை துரத்துதென்று
வனவாசம் போனவனை
மரணமும் தொரத்துச்சுன்னா மனுசப்பய என்ன செய்வான்
நீதிசெத்த நிலத்துமேல நித்தம் செத்துப் பிழைப்பதற்கு
பாதிசெத்த உசுரோட பரதேசம் போவதுமேல்....
வரம்வாங்கி தவங்கிடந்து
வயித்துல சுமந்தபுள்ள
வட்டிக்குக் கடன்வாங்கி
தொட்டில்கட்டிப் போட்ட புள்ள
வறுமை தொரத்துதென்று வனவாசம் போனபுள்ள
நெத்தியில குண்டுபட்டு நெடுமூச்சை விட்டுடுச்சு
வயித்துப் பொழைப்புக்கு
வனத்துக்குள் போனவனை
இழுத்துச் சென்று சுடச்சொல்லி
எவன் கொடுத்தான் அதிகாரம். ...?
வருவான் பிள்ளையென்று
வாசல்கதவை திறந்துவைத்து
வருசமெல்லாம் காத்திருக்கு
வழிபார்த்து பெத்த மனம்
வாழவழி காட்டாத வக்கத்த அரசாங்கம்
ஏழைகளைப் பலிகொடுத்து
எதைநிறுவத் துடிக்கிறது....?
பாழும் வயித்துக்குப் பசிபொறுக்கத் தெரியவில்லை
அட
ஏழை சிரிச்சுப்புட்டா -
எமனுக்கும் பொறுக்கவில்லை.......!

**அழ. இரஜினிகாந்தன்**

பேசியதை மீண்டும் மீண்டுமாய்
எத்தனை முறை திருப்பி பார்ப்பது!

கோடிட்டு வைத்த எல்லா மின்னல்களையும்
வானவில் திருடி பூசிக்கொள்கிறது!

பூனையிடம் கொஞ்சிய பேச்சுக்களில்
ஏதும் மீதமில்லாதிருக்கிறது!

கரும்புச்சர்க்கரை வாசனையில்
நினைவின் கடைசி பருகல்
நாவிலே முகமிட்டிருக்கிறது!

முன்பை விட தனிமை இப்போது
அழுத வண்ணமாயிருக்கிறது!

இதய எல்லையில் கம்பிவேலிகளை
களைத்து போட்டதின் தடம் மாறியிருக்கிறது!

கொண்டாடிய காலம்தனில்
நிகழ்வினை சுமக்க மறந்த நொடிகள்
இன்னுமே மிச்சமிருக்கிறது!

பிழையாய் கிழித்துவிட்ட நெஞ்சத்திற்கு
தீராத நேசமிருக்கிறது சீம்பாலின் ஊட்டச்சத்தோடு!

**கலைவாணி**



# காவிரி

கீழே வெறுமை..
வாகன இரைச்சல்களால்
முன்பை விட அதிகமாகவே
எதிரொலித்தது காவிரிப்பாலம்...

நீர்த்துகில்களை இழந்த
பாலத்தூண்களெல்லாம்
தன் நிர்வாணத்தை ஒருசில
முட்புதர்களால்
மறைத்துக்கொண்டன...

அத்தூண்களின்
துகில்களையெல்லாம்
வேற்று மாநிலத்தூண்கள் தத்தம்
இரண்டாம் உடுப்புகளாய்
அணிந்துகொண்டன...

என்றோ செத்தழுகிய
நதிப்பாம்பை இன்றுவரை நோண்டித்திண்றவாரே
இருக்கும் மஞ்சள் எறும்புகள்
சாரை சாரையாய்
இங்குமங்கும் உலாவுவது
ஒரு கண் கொல்லும் காட்சி...

எதிரெதிர் படித்துறைகளில்
ஏறிஇறங்கியும், ஆற்றின்
நீளஅகலங்களில் ஓடியாடியும்,
குதூகலித்தாடிய வெறுமை
கடைசியாக மூச்சிரைத்து
ஏழைகளின் வயிற்றுப்பகுதியில்
தஞ்சம் புகுந்தது..

கனத்த நெஞ்சுடன்
மணலாற்றை பார்க்கின்றேன்..

இரு கரைகளிலும் காய்ந்து தலைசாய்த்து
மண்டியிட்டு மன்னிப்பு கோரும்
மனிதர்களைப்போல்...

கோரைப்புற்களை.

**ஆனந்த்**

கோவில் உண்டியல்
குவிந்தது
வியப்பில் இதழ்

**ஏ.பி.எஸ்**

ஒரு சில இரவுகளில்
சில பல கதைகளை காட்சிகளாய்
பார்க்கின்றேன்..
அது சில நேரங்களில்
குறும்படமாகவும்
சில நேரங்களில்
நீண்ட திரைப்படமாகவும்
ஒளிபரப்பாகின்றது...
ஒவ்வொரு கதையிலும்
எனக்கும் ஒரு கதாபாத்திரம்
இருக்கின்றது...
என் பெயர் கொண்ட
கதாபாத்திரத்திலேயே
நடிக்கின்றேன்..
அழுதும்
சிரித்தும்
பயந்தும்
நானும் நடிக்கின்றேன்
ஆனால்
என்னை இயக்கும் இயக்குனர் தான்
யார் என்று தெரியவில்லை..?

**சரண்யா சத்தியநாராயணன்**



விதி வி(ள)லக்கானது
விலைமாதுவிற்கு.

**ரமேஷ் கலை மித்ரன்**

நூற்றுக்கு நூறென்று
கல்சிலேட்டை..காட்டியவுடன்
வாரி அணைத்து
கன்னத்தில் வரம் கொடுத்த முத்தமொன்றின்
எச்சில் துடைத்த ..
இளவேனில் காலம் ஒன்று..

காய்ச்சலிலே..சுருண்டபடி
கவுட்டைக்குள் கை வைத்து
உடல்மடித்து..
குளிர்நடுக்கத்தில்..
புரண்ட தருணங்களில்
போர்த்தி நெற்றியில்
ஓதி ஊதியபடியே..
உதிர்த்த முத்தம்பெற்று
உறங்கிய..
கடுங்குளிர் காலமொன்று

விடுதிப் பள்ளியில் பயிலும் பருவத்தில்
விடுமுறை கழித்து விடைபெறும் போதெல்லாம்..
நெற்றியில் படர்ந்த முத்தங்களில்..
கண்ணீரின் ஈரமது..
தொடைக்கப்படாமலேயே
ஒட்டிக் கொண்டிருந்த..
இலையுதிர் காலம் ஒன்று...

வேற்றுப் புலம் ஒன்றில் வேலையென்று..
பிரிகையிலே..
பேருந்து இறைச்சலுக்கிடையில்
முந்தானையால் வாய்ப்பொத்தி
ஓ..வென்ற.
விம்மலுடன்..
ஒட்டிக்கொண்ட முத்தம் கொண்ட
கோடை காலமொன்று..

ஆடையும் மாலையுமாய்..
மணமேடைக்கு செல்லும் முன்
தாய்முகம்..தேடுகையில்..
தோளணைத்து துவாச் செய்து..
உச்சி முகர்ந்தவளின்
முதுமை வாசத்துடன்..
நகர்ந்த கார்காலம் ஒன்று..

ஆயுட்காலமென..
வாழ்வெழுதி செல்கிறது
அம்மாவின் முத்தங்களாய்..

நரை முளைத்த நாற்பதுகளில்
அரிதாகிப் போன அம்மாவின்
முத்தங்களை..
மீட்டெடுக்க முயல்கிறது..
பால்வாசத்துடன்..
இதழ்பதிக்கும்..
மழலையின் முத்தமொன்று..

என்றுமே ஈரமென
அம்மாவின் முத்தங்கள்...
அவை உயிர்மீட்டும் சத்தங்கள்...

**சிந்தா**

கால் கட்டை விரலுக்கும்
நடு விரலுக்குமிடையில்
வண்ண தூரிகை செருகி
அவர் வரையும் படங்களுக்கு உயிர் வந்து
உறவாட தொடங்குகின்றன;
விநாயகர் கை மோதகத்தின் உயிர்ப்பில்
நாக்கில் நீர் கசிகிறது;
காமாட்சியின் கை கரும்பின்
இலைகளின் பச்சையில்
பச்சையம் ஓடுகிறது;
கணுக்களை கடிக்க பல் ஊறுகிறது;
முள் கிரீட கர்த்தரின்
ரத்தம் வழிந்து நம் கால்வரை
வந்திடும் போலிருக்கிறது;
குரு நானக்கின் வெண்தாடி
ஃபேன் காற்றில் பறக்கிறது;
மலை தூக்கும் மாருதி ஓவியத்திற்கு
முன் தொகை கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன்;
சர்வ நிச்சயமாய் தெரியும்
அனுமனின் புஜத்தில் நெளியப்போகும்
பச்சை நரம்புகளும்
இறுகி பருந்த திட தசைகளும்
அவருடைய கனவு கைகளினுடையதாய்
தானிருக்கும்.....

**கோ. ஸ்ரீதரன்**



# தூரத்தின் தூரம்

இது கனவுக் காலம்
கனவுகளை அதன் போக்கில் விட்டுவிடுங்கள்
அவரவர் கனவுக்கென்று தனித்தனி நிறமுண்டு
வெளியில் தெரியாத வேர்களாய்
இரகசியங்கள் ரகசியமாய் இருப்பதே சிறப்பு
காலத்தின் வாலைப் பற்றிக்கொண்டு எதுவரை
செல்லக்கூடும் நாம்
முகமுடியற்று யாருமில்லையிங்கு
எந்தத்துளி முத்தாகுமென்று மழைகூட அறியாது
இருத்தலின் தவமறிய மௌனத்திடம்
புகுந்து கொள்ளுங்கள்
சுழலும் காற்றும் விழும் மழைக்கும் என்ன பந்தம் இருக்கக்கூடும்.
எனக்கான சுவாசத்தையும்
இக்காற்றுதான் சுமக்கிறது
சற்று நேரத்திலும் பெரும் பிரளயம் நிகழலாம்
இங்கு நானென்பது நானல்ல
என் ஆன்மா இதற்கு முன் எந்தக் கூட்டில் வசித்திருக்கும்
தூரத்தின் தூரத்தில் ஒரு வால்நட்சத்திரம் எரிந்து விழுகிறது
என் கண்கள் பச்சையைத் தேடுகிறது
என் கனவோ வெளிர் மஞ்சளாய் விரிகிறது
இது கனவுக் காலம்
கனவுகளுக்குள் மூச்சுவிடப் பழகுங்கள்.

**குமரேசன் கிருஷ்ணன்**

சுவர்க்கத்தினுள் சுவாதீனமாய்க்
குடியிருக்கும்
நரகங்கள்
சந்தர்ப்பங்களுக்காகவே
காத்துக் கிடக்கின்றன..

தகர்ப்பதையே
சாதனையாக்கும்
சாத்தான்கள்
உடைத்தது
சிலைகளை மட்டுமல்ல...

பேரழகின்
பிரம்மாண்டத்தில்
புதைந்துகிடக்கும்
பேருண்மையையும்
தான்...

அகத்திலேற்றியக்
கழிவுகள்
அழிவினுக்குள்
அழைத்துச் செல்கிறது
விதியை.....

**மதுரா**

# திவ்யாவின் கப்பல்

ஒரு மழைக்காலத்தில்
செய்யப்பட்ட காகிதக்கப்பல்
மீது பயணம் செய்கிறாள் திவ்யா...

சிறுதூரல்களின் அடர்த்தியில்
காகிதங்களில் ஓட்டை
விழுந்திடுமென அச்சமும்
கொள்கிறாள்....

சட்டென இடிக்கும் இடியினோசையில் கிளம்புகிறது கப்பல்...

உற்சாகம் கொண்டவள்
தன் இருகைகளையும்
குட்டைநீரில் துடுப்புகளாக்கி
உந்த வைக்கிறாள்....

காற்றும் மழைத்தூரலும்
பலமாய் இருக்கவே
திண்டாடிப்போகிறாள்...

எப்படியும் கரை சேர்க்கவேண்டுமென
பத்தடி குட்டைக்குள்
இக்கரையிலிருந்து அக்கரைக்கு கடினமாய்
முயற்சித்து முன்னேறியதும்

நிம்மதிப்பெருமூச்சையடைகிறாள் திவ்யா....
நனைந்த கப்பலை எடுத்து
உலர வைக்க மெல்ல பிரிக்கிறாள்....

"அப்பா அம்மா குட்டித்தம்பியென பெயரெழுதியிருப்பதும்
நனையாமல் இவர்கள்
பயணம் செய்து கரையேறிப்பதையும் மகிழ்ச்சியுடன் புன்னகைத்து
வென்றதை மழைமட்டுமே அறிந்தவொரு அற்புதம்...

ராம் பெரியசாமி



பாஷைகளற்றுப் போனதொரு உலகில்
எனக்கானதொரு மொழியினை
கையளித்தவன் நீ

வெம்மை எரிக்கும் இரவுகளில்
உச்சி வருடும் விரல்களின் இடுக்குகளில்
எனக்கான சில்லிடல் ஒன்றை எப்போதும்
சேமித்து வைத்திருக்கிறாய்

நீளும் திசைகளின் வழி பயணிக்கிறது நம் காலம்

நாம் நேசிக்கிறோம்
அன்பு செய்கிறோம்
உடன்படுகிறோம்... முரண்படுகிறோம் பிணங்குகிறோம்
நோகிச்சாகிறோம்
ஒருவர் மீது ஒருவர் ஏக்கங்கொள்கிறோம்
குரல் உயர்த்திக் கொள்கிறோம்
மௌனத்துள் வீழ்ந்து போகிறோம்

முகத்திலறைத்தாற்போல்
கதவடைத்துக் கொள்கிறோம்
விரியத்திறந்த மனதோடு காத்துக் கிடக்கிறோம் கோர்த்த விரல்களை
உதறிப் பிரிகிறோம் ஸ்பரிசித்த கணங்களை நினைவு கூர்ந்து ஆற்றா
மையால் கண்ணீர் வடிக்கிறோம்

ஒருவரிடம் ஒருவர் மன்னிப்புக் கோருகிறோம்
இறுக அணைத்து மூச்சு முட்டும்படி
முத்தமிட்டுக் கொள்கிறோம்
இறுதிக் கணம்வரை ஒருவரோடொருவர்
உடன் வருவதாய் உறுதி கொள்கிறோம்

ஏனெனில் உன்னை நானும் என்னை நீயும்
நம்மை நாமும் காதலிக்கிறோம்...

**ஜானு இந்து**

கொழுந்துவிட்டெரியும்
எரிசுடலையின் வெப்பத்தில்
பிணத்தின் நரம்புகள்
முறுக்கேறியதன் கைகால்கள்
துள்ளியெழுந்துவிடாதிருக்கத் தன்
கனத்த கைத்தடியால்
இரக்கமற்று
அடித்து நொறுக்கிச்
சாம்பலாக்கிப்
பெரு நிம்மதி கொள்ளும்
பொறுப்பான
வெட்டியானைப்போல.....

எந்தச் சிக்கலிலிருந்தும்
மீண்டெழுந்துவிடாமல் நையப் புடைத்து
நசித்துக்கொண்டிருக்கிறது வாழ்க்கை!

**வளவன் கரிகாலன்**

ஒரு மலட்டு நாயை இதுவரை பார்த்ததில்லை.
ஒரு மலட்டுப் பன்றியைப் பற்றிக்கூட
இன்றுவரை கேள்விப்பட்டதில்லை.
தான் மட்டும் எப்படி
ஒரு மலட்டு ஆணாக என்று
நொந்து கொள்வார்
கிருஷ்ணசாமி மாமா.
பாலத்து வைத்தியனின்
சிட்டுக்குருவி லேகியமும்
பலனளிக்காமல் போய்விட்டது.
சிட்டுக்குருவி பெயரில் இப்படி ஒரு மோசடி நடப்பது
அந்த சிட்டுக்குருவிக்கு தெரியுமா என்பது தெரியவில்லை.
வேலைக்கார சாம்பசிவத்தின்
ஐந்து குழந்தைகளின் படிப்புச்செலவையும்
இவர்தான் பார்த்துக்கொள்வார்.
குழந்தை மனசுங்க அய்யாவுக்கு
என்பான் சாம்பசிவம்.
உறங்கத்தோன்றாத இன்றைய இரவில்
அந்த குழந்தை மனதைதான்
மடியில்வைத்து கொஞ்சித்தீர்க்கிறார்.
தனக்குத்தானே தகப்பனாயிருக்கிற கனங்களை
அவரால் தவிர்க்க முடியாமல் போய் விட்டது.
ஜன்னலுக்கு வெளியே அவர் எடுத்துவைத்த தென்னை ஒன்று
குலை குலையாய் காய்த்திருந்தது.
அதைப் பார்க்கபார்க்க
சாரை சாரையாய் எறும்புகளைப் போல
மனதுக்குள் இறங்கியது துக்கம்.
படுத்திருந்த பத்மினியம்மாளுக்கு பக்கத்தில்
தானும் ஒரு குழந்தையாக சுருண்டு படுத்துக்கொண்டார்.
நினைவுகள் ஊறும் நெஞ்சணையில்
அவர் முகத்தை ததும்பத்ததும்ப அணைத்துக்கொண்டாள் மாமி.
அணைக்கிற கைகளுக்குள் அடங்குகிற யாருமே குழந்தைகள்தானே.

**கார்த்திக் திலகன்**



உன் வாய்க்கு தண்ணீர் கேட்காதே
தாகத்தை ஒளித்துவை
உன் உணவுக்காக அலையாதே
பசியைக் கொன்றுவிடு
உனக்கு உறைவிடம் இல்லையா?
வீதிக்கு வா
உனக்கு உயர்கல்விக் கனவா?
உன் தகுதிக்கு மீறியச்செயல் அது
அரசுநாற்காலி அது கிடக்கட்டும்
உனக்கு கைத்தொழில் போதும்
உனக்கு கோவிலில் நுழையத்தடையா
வணங்குவதை நிறுத்து
உன் விருப்பத்துக்கு சிரிக்காதே
அது பித்தனின் செயல்
உனக்குப்பிடித்ததை உண்ணாதே
அது பெருங்குற்றம்
உனக்கு பிடித்தவனை வணங்காதே
அது தேசிய அவமானம்
உனக்கு பிடித்ததை உடுத்தாதே
அது ஒழுங்கீனம்
உன் தாய்மொழியை உயர்த்தாதே
அது பாவச்செயல்
சமத்துவம் வருடத்திற்கு ஒருமுறை
வரும் சமபந்தியில் இலவசங்களை பெற்றுக்கொள்
ஓட்டுக்கு காசு வாங்கு வரிசையில் நின்று பழகு
வரியை ஒழுங்காகக் கட்டு
கொடி பிடி கோஷம் போடு
தோரணம் கட்டு வாக்குப்போடு
இந்தியர் என்பதில் பெருமிதம் கொள்வோம்....

கேள்விக்காய் வாய் திறந்தால்
சந்தேகக்கண்கொண்டு பார்த்தால்
உரிமைக்கு குரல் கொடுத்தால்
போராட்டம் நடத்தினால்
உயிர் பிச்சைக் கேட்டால்
நீயும் தேசத்துரோகியே....

**ஐ.தர்மசிங்**

துருவேறிய கம்பியில் தரையைத் தோண்டிக் கொண்டிருந்தோம்
எதைத் தேடுகிறீர்கள் என்றான் வழிப்போக்கன்
துரு ஏறிய நூற்றாண்டை என்றான் உடனிருப்பவன்
கம்பியின் நூற்றாண்டை என்றான் இன்னொருவன்
துருவிற்கும் கம்பிக்கும் இடைப்பட்ட நூற்றாண்டை என்றேன்
நான்

உனது நூற்றாண்டு
மண்டையோடுகளாலும் எலும்புகளாலும் ஆனது
அப்படியே குழியை எட்டிப் பார்
எனக்கடந்து சென்றான் வழிப்போக்கன்.

*(அடுத்த நூற்றாண்டில் உயிரோடிருக்கும் தமிழனுக்கு)*
**கார்த்திகேயன் மாகா**

# ஆஸிஃபாவின் குதிரைகள்

என்ன நிகழ்ந்ததோ எட்டு வயதிற்கு
என்ன நிகழ்கிறதோ ஐந்து வயதிற்கு
என்ன நிகழப்போகிறதோ மூன்று வயதிற்கு
உனக்கொன்று தெரியுமா
என் வீட்டிலிருந்து சிறிது தூரம்தான்
தள்ளி நிற்கின்றன உனது குதிரைகள்.
உன்னைக் காணாமல் கலங்கிய கண்களோடு..
வீடுதிரும்பாதலையும் குதிரைகளுக்கு
என்னிதயம் இன்றைய மேய்ச்சல் நிலமானது
சவாரி செய்ய ஆசைப்படும் எனது மகளை
அது ஆஸிஃபா என்றே நம்புகிறது
உன் குதிரைகளுக்கும்
எனது ஆஸிஃபாவிற்கும் எப்படியுரைப்பேன்
எட்டாம்நாள் கடவுளும் கற்பழித்தானென !?
இன்று உனது தந்தையின் கண்ணீராய் இருப்பது
நாளை மற்றொரு தந்தையின் கண்ணீராகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்

**நிலாகண்ணன்**

பலத்த மழை பெய்ததற்கான அறிகுறி
இன்னும் இருக்கிறது...
சிதைந்த குருவிக் கூட்டில்!

**மு.முபாரக்**



# இரவெனப்படுவது

இதோ ஒரு கூர்க்காவின் விசில் ஒலி
அதன் நிசப்தம் குலைத்து அழகு செய்கிறது

இணையை அடைய முனையும்
நாய்களின் போட்டியில் குரைப்பும் சச்சரவும்
இரவை *A* ஆக்குகிறது

இன்றைக்கு வேண்டாமெனும்
சங்கல்பம் உடைத்து
அதோ
கினி கினி கினி கினி என மணியடித்து
ஆசை தூண்டுகிறானே அந்த குல்பிக் காரன்

என்ன சோகமோ என்ன கோபமோ
யாரையோ ரசனை கூட்டிய
கெட்ட வார்த்தைகள் கொண்டு
திட்டிக் களித்து நடக்கிறானே
அந்த டாஸ்மாக் ஆண் மகன்

இதோ ...
சீறும் உறுமலாய் அதி வேகமாக
வீடு விரையும் அந்த சம்சாரியின் பல்ஸரில்
குழந்தைக்கான நொறுவையும் மனைவிக்கான பூவும்

அகால நிசியின் கருந்தோல் கிழித்து
உயிர் வரிகளாய் கிளம்பும் *TMS* ன்

உலகம் பிறந்தது எனக்காக எனம் உச்ச ஸ்தாயி
அந்த குடிசைவாழ் கூலியுடையது

தூரத்தில் சாலையோர கையேந்தி பவனில்
புரோட்டா கொத்தும் சட்டுவ ஒலி தாளலயம் தப்பாமல்

உரக்க பேசியபடி நடக்கும் ஏதோ ஒரு குடும்பம்
இரவு ரயில் பிடிக்கப் போகிறது

வலசை போகும் பெயரறியா பறவையின்
வினோதக் குரல் இரவை புதுமை செய்கிறதே

நாலு தெரு தாண்டி மெலிதாய் கேட்கும்
குழந்தை அழுகுரலும் தாயின் தாலாட்டும்
இரவின் அம்சம் என்பதோடு

திண்பண்டம் பிடிங்கப்பட்ட குழந்தையின் பேரழுகையாய்
கிளரும் நிராதரவாய் கதரும் என் மன ஓலத்தையும்
சேர்த்துப் பார்த்தால்
யார் சொன்னது இரவு நிசப்தமானதென்று

அப்படித்தான் என யாராவது சொன்னால்
அதை ஏற்க மாட்டான் இக்கவி என
அவர்களிடம் சொல்லிவிட்டு

நீங்களும் தூங்காது விழித்திருக்கலாம்
உங்கள் படுக்கையில் இரவை ரசித்து

**துருவன் பாலா**

விற்பனையாளனின் கூண்டில்
கேவிக் கொண்டிருக்கும் ஒரு பறவை.
வாடிக்கையாளனின் சட்டைப்பையிலோ
சலசலக்கிறது
பின்க் நிறக் காகிதப் பணம்.
இரண்டையும் பரிமாற்றிக் கொள்வதாய்
ஒப்பந்தமிடப்பட,
கூண்டிலிருந்து வெளிவரும் பறவையும்
சட்டைப் பையிலிருந்து வெளிவரும் பணமும்
சிறை மாற்றப்படும்
வெகு நாள் கைதிகளாய்
எதிரெதிரில் மௌனித்து நிற்கின்றன.
அவற்றிற்கிடையே பூத்திருந்த
சிறு செடியின் சிறு இலையொன்று
மிகச் சிறிதாய் அசைந்தவாறு இசைக்கிறது
சுதந்திரப் பாடலொன்றை.
அப்பொழுது, வீசிய பலத்தக் காற்றில்
பறவையோ, பணமோ
பறந்து செல்லக்கூடுமென
வாடிக்கையாளனும், விற்பனையாளனும்
தத்தம் கண்களை அச்சத்தோடு
அகல விரித்து நோக்க,
கூண்டு பறந்திருந்தது
கண்கள் காண அறியா அகத்திசையில்..

**ராஜ் சௌந்தர்**



ஒளிந்துக் கொண்டு இருக்கின்றன
அரையுறக்கத்தில் உந்தன் அணைப்பும்
உன்னிதயத்தில் என் முகப்பதிப்பும்...

கசந்த குழவி இனிப்பை அள்ளி
கொட்டியதாக எண்ணவைக்கும்
சமயலறையில் இடைப்பற்றிய உந்தனிறுக அணைப்பால்

கரண்டியில் துழாவி குழம்பை ருசிப்பார்த்து
கண்களை உருட்டுமென்னை
தாயங்கள் ஆடுகின்றாய் என்பாய் நீ...

மிக பிடித்த பாடல்வரிகளில்
உன் புருவத்தை ஏற்றயிறக்கம் செய்து
என் போலி சினத்தில் குறுநகை செய்திடுவாய்...

சட்டென சங்கமிக்கும் இதழ் ஒற்றலால்
வெட்கம் சிவந்துவோட செய்வாய்...

உந்தன் வருகைக்காக நேரங்களை நெட்டிமுறித்து
இனிய நினைவுகளோடு காத்திருப்பேன்

இவையெல்லாம் ஒளிந்துக் கொண்டிருக்கின்றன
நீயும் நானும் போடும் சண்டைகளில்
யார் முதலில் பேசுவது என்ற ஈகோவினுள்...

**பிரவீணா தங்கராஜ்**

தேய்ந்து போன மூக்கு கண்ணாடியையும்
பழுதாகிப்போன காதுகேட்கும் கருவியையும்
மாற்றித் தர சொல்லி
மகனிடமும் மருமகளிடம்
தயக்கம் உடைத்து
கெஞ்சி கேட்க....

இனி படித்து
என்ன பண்ண போறீங்க??

இந்த வயசுல காது கேட்டு
என்ன ஆகப்போகுது?

என்ற ஏளனக் கேள்விகளை
எதிர் கொண்டு
தள்ளாடும் நடையின்
தள்ளாட்டம் அதிகரித்து
திரும்பும் போது
அன்று தான் வாங்கி தந்த
நடைவண்டி முதல்
கட்டி தந்த வீடுவரை
வந்து போகிறது
அவர் நினைவுகளில்...

தந்தை கிழவனான
கதை புரியாமல்....

**பிரபுசங்கர்**

# வெளியின் உள்ளமர்வு

கூர்மையான நுனிப் பார்வையில்
சேதாரமற்று பிடிபட்டது
ஏதோவொரு மார்க்கத்திலுருந்து
இன்னொரு மார்க்கத்துக்கு
இலக்காய்ப் பறக்கும் விமானம்
நதி நீரில் பயணிக்கும் பூப்போல.
உறவுகள் காத்திருக்கும்
பிரிவின் துயரை துடைத்தெடுக்க.
ஆகாத அறிமுகத்தை அறிமுகமாக்கிக் கொள்ள வாயிலிலேயே ஏந்திய
பதாகையோடு மகிழுந்து ஓட்டுநர்.
அலையலையாய் தொடரும் நினைவுகளை
கத்தரித்து அமிழ்கிறேன் வானில்
முந்தையப் பொழுதில் கண்ணுற்ற
பிந்தையப் பொழுதில் கண்ணுரும் நட்சத்திரங்கள்
பளீரிட்ட நிலா
அந்தியின் புள்ளியில்
கூடடையும் பறவைகள்.
நெரிசலற்ற வெளியில்
தத்ரூபமாய் தென்படுகிறது
மயிலென்றால் மயிலாய்
யானையென்றால் யானையாய்
மேகக்கூட்டத்தின் மய்யத்தில்.
விரலிடுக்கில் சூரியன் சாத்தியப்பட
வெளியின் வெளியும்
அப்பட்டமாய் அமர்ந்திருக்கிறது
என் வீட்டு வரவேற்பறையின்
இரண்டுக்கு இரண்டு டைல்ஸில்.

துரை.நந்தகுமார்



# தந்தையின் திட்டம்

தந்தை என்னைத் துறவியாக்க
திட்டமிட்டுக் கொண்டிருந்தார்
நானோ
நூலாம்படையில் மாயவித்தைக்காரன் போன்ற பிம்பம் சுழன்று
நிழலால் ஓவியம் வரைவதை கவனித்தேன்
மேலும் அது அசரீரியாவதை
நிதானித்து அறிந்தேன்

அடர்ந்த வனாந்தர மௌனம்
புரட்டயியலாத புத்தகமாகவும்
யானைகளின் தந்தங்களும்
உதிர்ந்த மான்கொம்புகளும் கிடக்கும் பாதை
கன்னிமை கொஞ்சும் அமுத ஊற்றாகவும்
முடிவின்றிப் பதிந்தன

நேர்த்திக்குறிப்புகளை பேச வழியின்றி
உடல்கள் உறங்கும் கல்லறைக் காட்டுவழி
செப்புமணலாக்கினேன்

நடுவிரல் கையில் அசைவது போல்
நடுமுதுகில் பாம்பு சீறி எழுவதை
நீல அல்லித் தண்டால் பாடினேன்

துரையீரலில் இருந்து கம்பளி போர்த்திய
கேளையாடு விடுபட்டு ஓடுவதை
கனவிடம் சொன்னேன்
பால்யத்தை இரகசிய உண்டியலாக்கி
வெள்ளிமலையில் பதுக்கினேன்

எல்லாம் நிலையற்றது என்ற வார்த்தைகளாகவே
மழை எப்போதும் பொழிவதை
கருத்தில் கொண்டேன்

வறுமைப் போராட்ட உச்சியிலும்
சேத்தாண்டி வேடத்தின் பின்னும்
கருப்பனின் ஆட்டத்தின் முன்னும்
அன்பெனும் கரு வெளிதனில் தொப்புள்கொடியோடு
பற்றி வளருவதைக் கண்டேன்

அப்பா எனது கூந்தலுக்கு
சாம்பிராணி புகையால் வாசனையேற்றுகையில்
போராட்டமே புனிதப் பயணம் என்று பேசி
முளையில் செங்கண் ஒன்று பதித்தார்

அகக் கண் முத்தங்களை மட்டுமே ஏன் தேடியது
கருணையின் குளிரோடு
உடலெங்கும் ஏன் பாய்ந்தது
துறவியின் வஸ்திரங்களை விழித்திரையாக
எப்போது அணிந்தது
மலர்தலும் மரணம் என்பதை எப்போது அறிந்தது

**தேன்மொழி தாஸ்**

அம்மா சேர்த்து வைத்த
மண் உண்டியலை
திருடியது போல-
நாம் மரங்களை வெட்டி
கேவலம்
மட்டன் பிரியாணி கிடைக்குமென்ற
விளம்பர பதாகைக்கு
ஆணியடிக்கிறோம்.......
அவன் விதையே முளைக்காதவாறு-
பூமிக்கு ஆணியடிக்க வருகிறான்.........

கால்கிலோ வெண்டைக்காயையும்
மனைவியின் விஸ்பரையும்
நெகிழி பையில் வாங்கி வந்து-
யாருக்கும் தெரியாமல்
வீதியில் வீசுகிறோம்......
அவன் பிணங்களின் கழிவையும்
மருந்துக்குப்பையையும்
அதிகாரப் பூர்வமாய்
வெள்ளாமை பூமியில் கொட்டுகிறான்.......

ஆளுக்கொரு போர்போட்டால்
வாழ்ந்தாயிற்றென-
பி வி சி குழாயில்
குரோட்டன்ஸ் செடிக்கு தண்ணீர் ஊற்றுகிறோம்....
அவன் வாழ்தலின் மொத்தத்தையும்-
மீத்தேனில் எரிய வைக்க
ஒப்பந்திக்கிறான்............

நாம் நம்மை பார்க்கிறோம்
அவனும் நம்மை பார்க்கிறான்....

**பொள்ளாச்சி முருகானந்தம்**



# செத்துக் கொண்டிருப்பவள் (கள்)

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செல்வச் சீதனமே பேசும் பொற்சித்திரமே
நீங்கள் எல்லாம் வெறும்
கானல் நீராய்ப் போனதெங்கே?

விறகொடிக்கப் போன சின்ன மகள்
சிதைந்து நைந்து நான்காம் நாள் கிடைத்ததில்
விதியற்றுப் போன தாய்க்கு
இரண்டு முழக் கயிற்றில்
நியாயம் கிடைத்துப் போனது

தன் குதிரை தேடிய ஆசிபா
கோவிலில் சிதறுண்ட எட்டாம் நாளில்
தகப்பனார் ஆடு மாடு குதிரையோடு
ஊர் வீட்டுக் கிளம்பியதில்
நியாயம் மிகத் தாராளமாய்!

நள்ளிரவில் ஏன் பெண் நடமாட வேண்டும்
கலாச்சாரம் பின்பற்று
நியாயக் குரல்கள் நிர்பயாவிற்கு...

எம் தந்தையர் நாடு இது
சகோதரத்துவம் போதித்த
எங்கள் இந்தியா
இதில் செத்துச் செத்துப் பிழைக்கிறோம்

திறவாத எங்கள் கருவறைகளை உடைக்கும் போது
பிறந்தே 180 நாட்கள் ஆன
பிஞ்சுக் குழந்தை கதறித் துடிக்கும்போது

இரும்புக் கம்பி கொண்டு பிறப்புறுப்பில் துளைத்தபோது
அய்யோ!!
அழுவதற்கும் உதடுகள் இல்லை எங்களிடம்

விட்டு விடுங்கள்
இல்லையில்லை
வெட்டி விடுங்கள்

எங்கள் தனங்களை வெட்டி வீசி விடுகிறோம்
எங்கள் யோனிகள் திறவாது போகக் கடவ..

இனி பிறக்கும் எம் பிள்ளைகள்
பால் வாசமின்றிப் போகட்டும்
விலா எலும்பு
முறித்துக் கலவி சமையுங்கள் நீங்கள்

எல்லாவற்றையும் போல்
எப்போதும்போல்
எங்கள் மேல் தான் எல்லாத் தவறுகளும்!

**கார்த்திகா அ**

உறவுகளை தொலைவில்
வைத்துவிட்டு
உறங்காயிரவுகளை அருகில்
வைத்துக்கொண்டு
வார்தையை மொழிமாற்றி மௌனமாக்கி
மௌனத்தை மடைமாற்றி வரிகளாக்கி
முன்பின் தெரிந்தும்தெரியா
முகமது அறிந்தறியா நட்பு வட்டத்தில்
பகிர்ந்து மகிழ்ந்து நெகிழ்ந்துருகி
சுகதுக்க நினைவுகளை
சுமக்கும் எண்ணக் குமிழிகளை
காற்றிலே கரையவிட்டு
கையடக்க
கணினியின் குழந்தையோடுப் பேசி
காலத்தைக் கழிப்பதையே
கனமாய் நினைத்து
உட்கார்ந்த இடத்தில்
உலகத்தை சுற்றிவருவதாய்
உளரித்தொலைக்கிறோம்...
நம்மை விரல்பிடித்து அழைத்துச்செல்கின்றன
உணர்களைக்கொன்றோ..
தூண்டியோ...
இலாபக் கணக்குப்போடும்
உலக பெருநிறுவனங்களெனும்
ராட்சத எந்திரங்கள்...!

**குமரன்**



ஒரு பிரவாகத்தின் பெருக்கோடு உன்
வாசல் நெளியும் என் மரணம்
உன் கதவை தட்டலாம்

என் விடை பெறுதலின் உறக்கமற்ற வானம்
என் இறகை உதிர்த்து விட்டுப் போகலாம்

நழுவும் காலத்தின் அந்தியிலும்
சரிந்த வாழக்கையின் முனையிலும்
மரணம் காயமாக பூத்திருக்கிறது
அறுந்த உன் விரல் வழி உன் கருணை
மீட்டதா அவமானங்களில் அமரும்
உடலில் மீதமிறுப்பது வெறும் நிர்வாணமே

நீ தோல்விகளை பரிசாக கடத்திய
நாளொன்றில் மரணத்தின் தூரம் என்
கதவின் அழைப்பு மணியை அழுத்திய
வண்ணம் நீ என் வாசல் படிகளில்
இறங்கிச் செல்லும் காலடி ஓசை என்
சுவாசத்துக்கிடையில் ஓர் ஊசியை
நுழைகிறது

உயிர் கரை சேரா மௌனத்தின்
பள்ளத்தாக்கில் புதையுண்டிருக்கும்
மரணத்தின் குரலில் மீள்தல் என்பது
ஒரு வார்தையல்ல

இல்லாமல் போன ஒரு இளவு வீட்டின்
வேறுமையை நீ அறிந்ததே இல்லை
என் இழப்பின் வலி உன் இருப்பை
தீர்மானிக்கும் உடல் பொய்யாக
உருவம் தொலைந்து உன் மனச்சுவரில்
என் நிழற்படம் மறந்து போன என்
பால்யத்தின் கதை சொல்லும்

விதியை துரத்தும் ஒரு அந்திமத்தின்
கணத்தில் நுழைகிறேன் இருப்பிட்கும்
இறப்பிற்கும் முடிச்சு விழும் பிழையற்ற
தருணத்தில் திறந்து வை எனக்கான
உன் வானத்தை

வேர்களின் வனாந்திரத்தில் என் விதைகளை தொலைத்த திசைகலில்
உயிர்த்தெழுகிறது
நமக்கான விருட்சம்

என்னால் நிரப்ப முடியாத உன் நாட்களும்
காலங்களும் ஏதுமற்றதாகிப்போய்
பொருளற்ற காலத்தின் பெருவெளியிலும்
பொருளுணரா வாழ்க்கையிலும்
நாமற்றதாய் வழிந்து கொண்டிருக்கிறது
நம் காலம்

**(z) ஜபீர்**

குழந்தை பருவம் அழகானதில்லை
குழந்தை பருவம் அற்புதமானதில்லை
குழந்தை பருவம் பொக்கிஷமானதில்லை

அப்பருவத்தில்....
இருட்டில் திகிலிட வைத்த
காமுகன் ஒருவனின் கை நீள்கிறது
அப்பருவத்தில்....
இருநூறு ரூபாய்க்கு அவளை விற்ற
உறவின் முகம் ஒன்று இருக்கிறது
அப்பருவத்தில்....
அந்தரங்கத்தை தீய்த்த
சிகரெட்டு துண்டுகள் புகைகின்றன
அப்பருவத்தில்....
உடலெங்கும் ஊறிய
மதுவாடை மீசைகள் மொய்க்கின்றன
அப்பருவத்தில்....
எப்போது விடியும் என்றேங்கிய
இரவுகள் கசிகின்றன
அப்பருவத்தில்...
எப்போது முடியும் என்று அழுத
பகல்கள் எறிகின்றன

அப்பருவத்தில்....
அவளது ஓடைகளில் ரத்தம் கசிகிறது
அவளது பூமியில் பட்டாம்பூச்சிகள்
மலிவு விலை உதட்டு சாயத்தில் வண்ணம் கொள்கின்றன
அவளது வெளியெங்கும் கவுச்சி வாடை வீசுகிறது
அவளது நினைவுகளில் தூரத்து வீட்டில்
தான் வளர்த்த செல்லப்பூனை வாழ்கிறது

அவளக்கென பெயரில்லை அவளுக்கென முகமில்லை
அது லட்சம் கோடியாய் சிதறியிருக்கிறது
அவள் என்பது வெறும் அவள் இல்லை

அவளின்.....
குழந்தை பருவம் அழகானதில்லை
குழந்தை பருவம் அற்புதமானதில்லை
குழந்தை பருவம் பொக்கிஷமானதில்லை

**நெய்தல்**



எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு
இரத்தக் குடம் உடைக்கப்பட்டு கொண்டுதானிருக்கிறது

எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு தோட்டா
யாரோ ஒருவரின் நெஞ்சை
குறி பார்த்துக் கொண்டுதானிருக்கிறது,,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு
சாதி காதலர்களின் சவங்கள்
தண்டவாளங்களில்
சிதறடிக்கப்பட்டு கொண்டுதானிருக்கிறது,,,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு மதம் மனிதம் கொன்று
புனிதம் போதித்துக் கொண்டுதானிருக்கிறது,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
யாரோ ஒருவரின்
கனவுகள் சிதைக்கப்பட்டு
கொண்டுதானிக்கிறது,,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
விரும்பியோ, விரும்பாமலோ
ஏதேனும் ஒரு பெண்
தன்னை தொலைத்து கொண்டுதானிருக்கிறாள்,,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு
பெண் குழந்தையின்
அந்தரங்க உறுப்பில்
அநாகரீக நகக் கீறல்கள்
பதிவாகி கொண்டுதானிருக்கிறது,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு அழகான புன்னகையில்
ஆழமான துரோகம்
ஒழிந்து கொண்டுதானிக்கிறது,,,,,,

எங்கேனும் ஒரு மூலையில்
ஏதேனும் ஒரு மலர் முகத்தில்
மார்ச்சுவரின் துர்நாற்றங்கள்
மறைந்து கொண்டுதானிருக்கிறது,,,,,

எங்கேனும் ஒரு மூலையில்,,,,,,
ஏதேனும் ஒரு கடவுள் புத்தகத்திற்குள்
காம சுந்தரியின் புகைப்படங்கள்
அச்சடிக்கப்பட்டு கொண்டுதானிருக்கிறது,,,,,,

இப்படிதான்
எங்கேனும் ஒரு மூலையில் நடக்கின்ற
ஒவ்வொரு நிகழ்வுக்குள்ளும்
ஏதேனும் ஒருவனுக்குள் உங்களை போன்றே
நானமர்ந்து கொண்டுதானிருக்கிறேன்,,,,

**சுயம்பு**

அவர்களுக்கு காடென்னும்
சொல் புதிதாக இருந்தது.
ஆதிமரங்கள் கை நீட்டி
மேகத்தை வருடிக்கொடுத்தை
அவர்கள் நம்பவில்லை.
சிறுத்தைகள் நடந்த இடம் என்று சொல்லியும்
அவர்கள் சிரிக்கிறார்கள்.
யானைகள் இங்கு தான் தாகம் தீர்க்கும் என
வற்றிப்போன சுனையை
காட்டினால் முகம் சுளிக்கிறார்கள்.
காட்டின் தேவதை
தன் ஒரே பிரசவத்தில் பிறந்த
பல நூறு விதைகள் இங்கே
தான் விருட்சமானது என்றாலும்
நம்பியதாக தெரியவில்லை.
கடவுளை செல்லப்பெயரால்
அழைக்கும் பறவையின்
கலைந்த கூடுகளை வெறும்
சுள்ளிக்குப்பையாய்
ஒதுக்குகிறார்கள்.
அவர்கள் கைகளில் புலியின்
முகமூடி இருந்தது.
தங்கள் சட்டையில்
வனங்களைக் காப்போம்
என பொறித்திருந்தார்கள்.
அவர்கள் என் தலைமுறை தாண்டி
அடுத்த சில தலைமுறை சார்ந்தவர்கள் போலும்.
அவர்களுக்காக காட்டின் வரைபடத்தை மட்டும்
விட்டுச் செல்கிறேன் யாரோ
வெட்டிய மரங்களின் வேர்களின் மேல்.....!

**மதுசூதன்**



டோன் மில்ட்டனைத் தெரியுமா உங்களுக்கு?
தெரியாதென்றால் அவரை எனக்கு
நன்றாகவே தெரியும்...
அவரது பூனைகளின் கூடுகளுக்குள் நானும்
நுழைந்து வந்திருக்கிறேன்,
கேவின் ஜோஸ்வாவை
உங்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை,
அமெரிக்கன் டைம்ஸில்
அவரது கவிதை மொழிகள் அத்துணைப் பிரசித்தம்
கிமிக்கோ ஷிகியின் ஜப்பனீஸ் கதைகளில்
என் கவிதைகளும் கடந்து போகின்றன...
இவர்களைப் படிக்காத கவிதைகள்தான்
ஷெல்லியையும், ஜான் கீட்ஸையும் மட்டுமே
தூக்கிப் பிடித்து திரிகின்றன,
அவை நீயுட்டனின் மூன்றாம் விதிகளுக்குள்
முக்காடிட்டும் பதுங்கிக் கொள்கின்றன,
இணையத்தில் தேடிப் பாருங்கள்:
நிச்சயம் இவர்கள் யாரும்
உங்களுக்கு அகப்படவே மாட்டார்கள்,
நானும் ஒரு பந்தாவிற்காகத்தான்
இந்தக் கவிதையில் இவர்களைப் பிரசவித்திருக்கிறேன்!
இனியாவது
தமிழ்க் கவிஞர்களையும் தமிழ் அறிஞர்களையும்
தூக்கி பிடிக்கப் பாருங்கள்!

**முகமது பாட்சா**

கவிதை செய்வது போல
அத்தனை கடினமல்ல ஒரு கொலை செய்வது

மொழிகளைப் பூட்டி வைத்த
ப்ரியமானவர்களின் மௌனம் கூட
ஒரு கொலை செய்துவிடும்

தாழிடாமல் எறிந்த
ப்ரியமானவர்களின் தணல் சொற்களோ
தாமதமின்றி ஒரு கொலை செய்துவிடும்

இதோ பாருங்கள் ஒரு பாடல் கூட
கத்தியின்றி இரத்தமின்றி
கொலை செய்கிறது என்னை

பிடித்த பாடல்களென்று
பட்டியலிட்டு போனவளின்
நினைவுகளில் கூர்த்தீட்டி
அதோ காற்றலையில் வருகிறது

சாய்ந்து சாய்ந்து நீ பார்க்கும்போது அடடா ஹே ஹே ......

ஒரு பாடல் எப்படி கொலை செய்யுமென்று
என்னிடம் கேட்காதீர்கள்
அதற்கு நீங்கள் முதலில் காதல் செய்ய வேண்டும்

**மணி_அமரன்**

என் விளையாட்டு மைதானமே
செம்மண் புழுதியில்
நீ புரட்டியெடுத்த வைரமிது,
அடையாளம் தெரிகிறதா?

என் மோன வகுப்பறையே
இன்று வாய்கிழிய பேசுகிறது உனது அமைதி!
கேட்டாயா நீ?

என் வருகைப் பதிவேடே
வசந்தக் கனவுகளை
இன்னுமா அடைகாக்கிறாய்?

எனதினிய கரும்பலகையே
நினைவிருக்கிறதா
உன்னில் நான் வரைந்த வாலில்லா பூனைக்குட்டி?

என் மேசைத் தலையணையே
இப்போதும்
பிதாகரஸ் தேற்றத்தை ஆசிரியர் விளக்கும்போது
நீ தாலாட்டுதான் பாடுகிறாயா?

என் குட்டி சாக்பீஸே
நீ இன்னும்
இந்தப் பிரபஞ்சத்தை வரைந்து முடிக்கவில்லையா?

விடுமுறையில் மட்டும் பள்ளிக்குச் செல்வதும்
சன்னல் வழியே இன்னும் கற்பதுமாய்
ஊரிலேயே வசிக்கும் ஒரே நண்பன்
பூங்குன்றனை இப்போதும் அடிக்கிறாயா
கணக்கு வாத்தியின் சவுக்குப் பிரம்பே?!

**குறிஞ்சி நாடன்**



.

நெல் அறுவடைக்கு
முந்தைய நாள் காலையில்
சனி மூலையில்
சாணத்தில் பிள்ளையார் பிடித்து
கற்பூரமேற்றி தேங்காயுடைத்து
சாமி கும்பிட்டு கதிர்பிடித்து (அறுத்து)
அறுவடையைத் தொடங்கிவைப்பார் அம்மா...

ஒரு எட்டு எட்டிப்
பார்த்துவிட்டுச் செல்வார்
பக்கத்தூர் உரக்கடைக்காரர்
மாபாஷா பாய்

அம்மா அன்றிரவு
அறுவடை செய்யக் கட்டுக்கட்டவென
தெருத்தெருவாய்ச் சுற்றி
ஆட்கள் பிடித்துவிட்டு
வீட்டில் நுழைய....

அக்காவின் திருமணத்திற்கு பணம்கொடுத்த
ஊர்ப் பெரியகவுண்டர் வந்து
நினைவுபடுத்திவிட்டுச் செல்வார்

களத்து மேட்டில்
கதிரடித்து விற்பனை செய்து
வாங்கி வந்தப்பணத்தில்
வங்கிகடனை கட்டிவிட்டு

வீடுவந்து சேர்கையில் சேட்டுக்கடையிலிருந்து
நோட்டீஸ் வந்திருக்கும்
அம்மாவின் தாலியை மீட்கச்சொல்லி

களத்துமேட்டில்
உலர்த்தப்பட்டிருக்கும் வைக்கோலை
ஏருழுத மாடுகளுக்கு
போர் போட காத்திருக்க...

வட்டிக்கு ஊர்கவுண்டர் வீட்டு
வேலையாட்கள்
வண்டிவைத்து ஏற்றிச்செல்லவர்

புளியமரத்தடியில்
கட்டியிருக்கும் மாடுகள்
வெறுமனே பார்க்கும்

அப்பா நழுவும் கோவணத்தை
இழுத்துக் கட்டியபடி
அறுவடைத் தாளில்
சிதறி சிக்கிக்கொண்டிருக்கும் வைக்கோல்களை
குச்சியெடுத்து தள்ளித் தள்ளி
ஒவ்வொன்றாய் சேகரித்துக்கொண்டிருப்பார்.

**கவி. விஜய்**

# மரணத்தின் நிசப்தப் பேரலை

கசிந்துருகும்
கருஞ்சுடர் மினுக்கத்தில்
குளிர்காய்ந்து பயந்திருப்பவனின்
சில்லிட்ட சருகுடலை
பற்றி எரியும் பெருந்தீ
ஓசையெழுப்பி துணை தேடுகிறது

பூவின் நைந்த புன்சிரிப்பின் சாரம்
ஈரப்படர்வில்
இதயத்தின் நாத
மகுடி வாசிக்கும்போது
சற்றே அதன் வழிக்கோட்டில்
விலகி புரண்டு படு
பூ வருடி சாதல் கூடும்

பற்றி எரியும் தீயின் கொழுந்து
சோகச்சாயலின் இராக்கதம்
அது தீண்டி உயிர்த்தவர் எவருமில்லை

உயிர்களை பல் திசையிலும்
பாய்த்து தேடும்
அதன் வேட்கையின் பிடியில்
துடுப்புகளே படகை
கவிழ்த்துவிடும்

உயிர் தொடும் காலனின்
நெஞ்சத் தழுவல் தரும் பரிசுக்கு
காத்திருப்போரிடம் உன் உடலை கரை சேர்க்கும்
அலைகளைப் பற்றிக்கொள்
காதல் என்பது மரணத்தின் நிசப்தப் பேரலை.

**ச. கனியமுது**



# இலச்சினை

காரை பெயர்ந்த திண்ணையின் மீது
அமர்ந்திருக்கிறது
சிறகொடிந்த பறவையொன்று...
துக்கித் தூக்கிப் பார்த்தும்
முடியாதென்றானாபின்னே
ஒடிந்துகிடக்கும்
அதன் ஒற்றைச்சிறகில் வழிந்தோடுகிறது
இயலாமையின் துயரம்...
வண்ணம் மிதக்கும் சிறகுகளும்
வானம் அளக்கும் மகிழ்ச்சியுடனும்
விதவிதமாய் கடந்து செல்கின்றன
புதிய புதிய பறவைகள்...
திண்ணைப் பறவையை அவைகள்
கடக்கும்போதெல்லாம்
அவைகளின் மொழிகள் இதற்கு
பரிகாசங்களையும்... கிசுகிசுப்பையுமே
பரிசளித்தபடி செல்கின்றன...!
தத்தம் சிறகின் பலத்திற்கேற்ப
உயர்ந்தும் தாழ்ந்தும் பறந்தபடி
வானத்தை வட்டமடிக்கும்
பறவைகளின் திசைகளை
தீராத ஏக்கத்துடன் ஏறிட்டு நோக்கும்
திண்ணைப்பறவை.........
தான் அளந்திருக்க வேண்டிய தூரங்களை
துல்லியமாய் கணக்கிட்டு
தன் அலகுகளால் நுகர்ந்து
ஆகாயத்தை ஒருமுறை
அண்ணாந்து பார்த்து...
அங்கே.!...தன்னைப்போல்
பலமான சிறகுகளுடன்
இன்னும் பறந்து கொண்டிருப்பது
சொற்பமாய் சில பறவைகள் மட்டுமே
என்பதை அதனால் அறிய முடிகிறது .!
திட்டமிட்டு முறிக்கப்பட்ட தன்
வலுவிழந்துபோன சிறகின் வலியுடன்
திண்ணைப் பறவை
விரக்தியாய் நிலம் நோக்குகிறது..
அங்கே ஏராளமாய்
இறைந்துகிடக்கின்றன அதன் இறகுகள்...
உதிர்ந்து கிடக்கும் இறகுகள்
ஒவ்வொன்றையும் உற்றுப்பார்த்தால்.....
அதில் அழுத்தமாய் பதிக்கப்பட்டிருக்கிறது
துரோணனின் இலச்சினை...

**சந்துரு**

நீ வருகின்ற சாலையில் நின்றபடி
உன் கண்களில் மாட்டிவிடப் பார்க்கிறேன்.
நீ வாராத நாட்களில் தெருவில் விடாமல்
கையோடு கூட்டிவந்து விடுகிறேன்
காதல் ஓவியமா நாய்குட்டியா

**மெய்யன் நடராஜ்**

# காற்றில் கரையும் கணம்

காரணமற்று
மனம் குமையும் இக்கணத்தை
எதைக்கொண்டு கடத்துவது

பளபளக்கும் ஆசைகளின் நீட்சியோ
துருப்பிடித்த ஏமாற்றங்களின் மிச்சமோ
குப்பை மனதை வாரிய தூரில்
வீச்சமாய் கசிகிறது

உடைந்துதிரும் வார்த்தைகளை
மௌனத்தின் ஊசிமுனை
குத்திக் கோர்க்கிறது
எஞ்சுவதெல்லாம் அர்த்தமற்ற சொற்களின் வரிசையில்
சேர்கின்றன

உஷ்ணம் வெறுக்கும் உடலென
வெக்கையாய் பிசுபிசுக்கிறது
இந்த இரவு
உறங்கிக்கடக்கவோ
விழித்துக்கிடக்கவோ தெரியாத
கணம் காற்றில் கரைகிறது

**தனபால் பவானி**



கருவறை கதவுடைத்து
வெளிவந்த வெள்ளிப்பந்து நான்.
களிப்புக் களிம்பு பூச்சோடு பலர்....!!
என் ஓராண்டு நிறைவு நாளில்
சீரோடும் சிரிப்போடும்
களேபார அசைவுகளோடு
குதூகல குமிழ்கள்
என் தொட்டில் சுற்றி...
பனித்துளி ஒன்றைச் சிந்தியப்படி
மலரொன்று வந்தெனக்கு
சிலிர்த்தேன்...
குளுமை ஒப்பனையோடு
ஒரு வீச்சு தென்றல்
என்மீது படர்ந்தது
குளிர்ந்தேன்..
நிலவின் வெள்ளை ஒளிக்கற்றை
எனக்காய் அளித்தது
சன்னல் கம்பிகள்
ஒளிர்ந்தேன்.....
பூத்தமலர்கள் எனக்காய்
மூத்த மழலையொன்று
முத்தங்களோடு தந்தது
மணம் நுகர்ந்தேன்...
அன்றியும்,
கண்ணே மணியே_ தமிழ்ப்
பண்ணே அழகுப் பெண்ணே
என்றெல்லாம் என்னைக் கொஞ்சாமல்
"ஹாப்பி பர்த் டே டு யூ" எனும்
எனக்குப் புரியாத
ஆரவார சேர்ந்திசையில்
நீயுமா என் அம்மா என
அமிழ்ந்து படபடப்புத் துடிப்புக்குள் என்னிதயம்!

**அகன்**

# மதில்மேல் பூனைகள்

கழுத்தின் பின்புறமாக
என் குரல்வளை நெறிக்கப்படுகிறது
வெளியில் வந்து
கைகோர்த்து நடக்க வேண்டிய வார்த்தைகள்
குருதி நனைந்து விழுகின்றன
பேசவும் முடியாமல் மறைக்கவும் முடியாமல்
கண்கள் வலுவிழந்து நிற்க
உரிமைகளை உரத்துக் கேளுங்களென
யாரோ கதறுவது கேட்கிறது
கட்டப்பட்ட கைகளை வற்புறுத்தி
வாய்களும் மௌனிக்க
மதில் மேல் அமர்ந்து எப்பக்கமாவது
விழுந்து விடலாம் என்றாலும்
மனம் கல்லாகவே சமைந்திருக்கிறது
அந்தக் கறுப்புப் பூனையைப் போலவே!

**முனியாண்டி_ராஜ்**

# மீண்டும்

ஒப்பாறியின் நடுவே படுத்துக்கிடக்கிறேன்
பூ மாலை தாங்கி
தப்பு கொட்டலின் சத்தம்
கேட்காமல்..

மூத்த மகள்
தன் பிள்ளைக்கான
தீட்டொட்டும் கவலையுடன்

மூத்த மகன்
தன் மனைவிக்கான
தலை சுத்தல் கவலையுடன்

இளைய மகன்
காரிய நாட்களின்
தங்கும் கவலையுடன்

உறவுகள்
நாழியாகும் கவலையுடன்

நண்பன்
வாங்கி தந்த கடனை
யார் அடைப்பார் கவலையுடன்

மனைவி
உறவறுத்த கவலையுடன்

நாய் மட்டும்
எனை கண்டே
குரைக்க...

கல் எறிகிறார் அதன் மீது
நாயும் நானும் ஓடுகிறோம்...!

**வீ.கதிரவன்**



ஏதோ ஒரு புள்ளியில்
லயித்துவிட்ட மனம்;

அந்த புள்ளியை இணைக்கும் கோடுகளில்
ஒவ்வொன்றாக பயணித்து புள்ளியைச்
சேர முற்படும் வேளையில்:

சேர முடியாமல்
கடந்த தூரங்களை
நினைத்து பார்த்து
கலைகிறது;

கடந்து வந்த பாதை என்ன
நடந்து வந்த பாதையா?
மறுபடி நடந்து செல்ல..

முற்றுப்புள்ளிகள் தொடர்வதில்லை;
விட்டில்கள் விளககாய் ஆவதில்லை;

தொடுவானம்
நெடுவானமாய்
நீண்டுக் கொண்டே போகிறது;

நீள வானமெங்கும்
நிசப்பதமான விசும்பல்கள்
மௌனத்தைக்
கலைத்து கொண்டிருந்தது !!!

**ஸ்ரீராம்**

## பட்டியல்

பாதையில் கிடந்த
கருவேல முள்ளை
ஓரத்தில் எடுத்துப் போடுகிறேன்
புட்டத்தை வாலால் மறைத்தபடி
ஒரு நாய்
என்னைக் கடந்து செல்கிறது
மாங்கிளைகளை வெட்டியாகிவிட்டது
இனி எந்த மரக்கிளையில்
கிளிகள் வந்தமரும்
மேகங்கள் எங்கே சென்றன
நடவு செய்பவர்களை
வெயிலில் காயவிட்டு
மாடுகள் தின்பதற்காகவாவது
உதவட்டும்
இந்த சுவரொட்டிகள்
அக்கரைக்கு நீந்திச் செல்ல
நீச்சல் மட்டும் தெரிந்திருந்தால்
போதாது
எப்போதாவது செல்லும்
விமானத்தை
வேடிக்கைப் பார்க்க
சொல்லியாத் தரவேண்டும்
காலம் முடிந்து
குருக்கள் கிளம்பிவிட்டார்
சாமி எங்கே போகும்.

**ப.மதியழகன்**

# பசி

வறண்ட தொண்டைக்குள்
எச்சில் இறங்குவது
பருத்த கடிகாரத்தின்
டிக் டிக் டிக் யும் தாண்டி
கேட்கிறது

பிரசவத்திற்கு தயாரான
பெட்டை நாயொன்று
குளிருக்கு இதமாய்
ஓர் நாற்காலியின் கீழ்
சுருண்டுகொள்கிறது

தெருவின் மஞ்சள் விளக்கடியில்
தன் சதைக்கு கடை விரித்து
உடற்பசி தீர்த்துவைக்க
காத்திருக்கிறாள் ஒருத்தி

முதுமை தின்ற மிச்சமொன்று
மரணப்பசியை விரட்டி விட்டபடி
தொய்ந்த தோலில்
ஊசிமுனையால் போதை
ஏற்றிக்கொள்கிறது.

சேர்வதும் பிரிவதுமாய்
திரண்டு கிடக்கும் தண்டவாளங்கள்
பசித்தவன் குடலை
பிரதியெடுக்கிறது.

ஏப்பம் விட்டபடி பேரிரைச்சலோடு
நுழைகின்றது ரயில்
அனைவர் பசிக்கும் சேர்த்து தானே தின்றது போல

**சிந்துஜன் நமஷி**



.

நாம் ஆர்வமாக கைபேசியை
பார்த்துக்கொண்டு இருக்கும்போது..
அவள்
கொடுத்திருந்த தேநீர் டம்ளரை,,
வாங்கிப்போக காத்திருப்பாள்,,,

நாம் நண்பர்களோடு
மதுவும் மாமிசமும் சாப்பிடும்போது,,
அவள்
புளித்த மாவை தோசையாக்கிவிட,
பசியோடு காத்திருப்பாள்..

நாம்
குளித்துவிட்டு வந்த ஈரத்தோடு..
டிவியில் விருப்ப பாடலை
சத்தமாக ரசித்துக்கொண்டு இருக்கும்போது..
அவள்
அறைக்கு வெளியே
துண்டோடு காத்திருப்பாள்..

நாம்
மூக்கை பொத்தியபடி
தாண்டிப்போகும்போது,,
அவள்
இருமியபடியே ஒட்டடையை
மீண்டும் துடைக்க,
துடைப்பத்தோடு காத்திருப்பாள்..

நாம்
சிகரெட் புகைத்தபடி கழிவறையில்
அமர்ந்திருக்கும்போது,,
அவள்
தெருக்குழாயில் தண்ணீருக்காக ஒருசோடி
குடங்களோடு காத்திருப்பாள்..

நாம்
விபத்தொன்றில் சிக்கிவிடும்போது,
அவள்
அடகு கடையில் தங்க நகைகளோடும்..
பிளாஸ்டிக் புன்னகையோடும்
காத்திருப்பாள்..

எந்த புண்ணியமும் செய்திடாத நமக்கு..
அவளென்பவள் அம்மாவாக
அமைந்திருப்பது இயல்பு..
மனைவியாகவும் அமைந்துவிடுவது,
அதிர்ஷ்டம்...!!

**கவிதை மொழியன்**

வறண்ட தமிழகம்
மூழ்கிக்கொண்டிருக்கிறது..
மதுக்கடையில்!

**க. அய்யப்பன்**

# முடிச்சுகள்

செல்லும் வழி நெடுக
நான் சில கேள்விகளை
பொருக்கிக் கொண்டு வருகிறேன்
அதில் அனைத்துமே
விடை கண்டறிய முடியாத
கேள்விகளாகவே இருக்கிறது
சிலவற்றைப் புரிந்துகொள்ள
முயற்சி செய்கிறேன்
இன்னும் சில
என்னுள் கரைந்து
வேறென உருவகம் கொண்டு
வெளி வருகின்றன
வெளிவந்த அக்கேள்விகளை
அதே வழியில்
இறைத்துக் கொண்டு செல்கிறேன்
எனக்கு பின்னால் வருபவர்கள்
அதை எப்படியும் எடுத்துக் கொள்வார்கள்
எனக்குத் தெரியும்
என்னைப் போலவே அவர்களுக்கும்
அதற்கான பதில்கள்
தெரியப் போவதில்லை
அவர்களிடமும் அந்தக் கேள்விகள்
இதே போன்றதான
விளையாட்டை ஆடிக் காட்டலாம்
எனக்குத் தெரியும்
பின்னே வருபவர்கள் அனைவரும்
என்னை வந்து கண்டடையுமிடத்தில்
பதில்களைக் கண்டறிவார்களென்று
கேள்விகளை இறைத்துக் கொண்டு வரும்
அவர்களுக்குத் தெரியாது
எங்கே செல்கிறோமென்று

**ர. மதன் குமார்**



முன்னிரவொன்றில்
ஒரு மரத்தினடியில்
வெகு நேரமாய்
மௌனித்திருந்தோம்
நம்மிருவரும்.

விழிகள் கூட
வெவ்வேறு திசைகள் நோக்கி
எதையுமே படமெடுக்காமல்
வெறிச்சோடி கிடந்தன.

அங்கும் இங்கும் ஒன்று தானிருந்த இதயம்
எப்படி இரண்டாய்ப் பிரிவதென்று
வேகமாய்த் துடிக்கத் தொடங்கி விட்டிருந்தது.
இன்னும் கொஞ்ச நேரம் கடத்தி இருந்தால்
நிச்சயம் வெடித்திருக்கும் அது.
நல்ல வேளை
அப்போது நீ
அங்கிருந்து சென்று விட்டாய்.

நான் இன்னும்
அங்கேயே தான்
நின்று கொண்டிருக்கிறேன்
விடியுமென்று.

**மீனு**

## நிலை மாற்றம்

இறுகி கிடக்கிறது உடம்பு
ஆடைகள் கிழிந்த வண்ணம்
ஊன் வடியும் காயங்கள்
இலையான்களின் இரைச்சல்கள்
மூக்கு துவாரங்கள் கண்கள் காதுகள்....
இறந்து விட்டான்

இரண்டு நாய்கள் குரைக்கிறது
இன்னும் மூன்று நாய்கள் சேருகின்றது
பலமாக சத்தமிட்டது அந்த வழியை நோக்கி.....

இது எங்கள் மொழி இல்லை
ஓ....! அவன் தான் வருகிறான்
மண் குழிக்குள் தலை காத்தோம்

கதைக்கிறான் சிரிக்கிறான் கண்கள் மிரண்டு மிரண்டு
நோட்டம் விடுகின்றது
நாய்கள் கொஞ்ச தூரம் போய்
தங்களின் வீரத்தை காட்டுகிறது

நாய்கள் பழக்கப்பட்டு விட்டன
குரைப்பதோ எதிர்பதோ இல்லை
வடுக்கள் மனக்காயங்கள்
எம் இறந்த உடல்களை ஞாபகப்படுத்தும்
மறுபடியும் ஒன்று சேர்த்து குரைக்கும்
மீண்டும் பழக்கப்பட்டு விடும்

**தென்னவன்**

# நட்சத்திரப்பறவையைஅறிதல் நிமித்தம்

பறவைப்போல் ஒருவாழ்வு
சிறகிலிருந்து உதிரும் ஒரு இழைஇறகு
ஆம் ... அது நீர்துளியை
தம்மேல் படரவிட்டும்
வழுவழுத்து உருண்டோடச் செய்வதால்;

காட்டில் உலவும் பிராணியின்
தேகமினுப்பாய் ஒரு வாழ்வு
ஆம்... குளியலை எப்போதும்
ஏற்கா அதிரூப அட்டகாசம்
பொதித்ததினால்;

மென் தசையை அசைத்சைத்து
நகரும் நத்தையைப் போல் ஒரு வாழ்வு
ஆம்... சிறுபுல் இடறினும்
தன்னுலகில் சுருண்டு சுருக்கிக்கொள்ளுதலினால்;

உடல்கழுவியபடியே கணந்தோறும்
திளைக்கும் மீனான ஒரு வாழ்வு
ஆம்... அழுதால் கண்ணீர்த்தாரையை
பிரித்தறிய வொண்ணா சாகசத்தால்;

எடுத்துக்கொண்டதினால்
கொடுக்கப்படும் கசையடிகள்
பகும், பகா எண்களால்
துகிலுரியப்படும்
மனதின் நிர்வாண வண்ணம்
சாம்பல் நிறத்தில்
பிரேதத்தை சுட்ட எச்சக் கூடுகளாய்
உங்களது சிறுபெருமுச்சின்
தீண்டலுக்கு காத்திருக்கிறது
பொலபொலத்து வீழ.

**வேதநாயக்**



## பச்சை

“பச்சக்” என ஒலிக்கும்
சேற்றினில் கால் வைத்தால்;
பச்சையாய் சொன்னால்
திருமணமும் அப்படித்தான்.
காலை இழுத்தால்
செருப்பு மாட்டிக் கொள்ளும்
செருப்பை சேர்த்து இழுக்க
சேறும் வந்து சேரும்.

வதுவையில் நமதருகே
பதுமையாய் நிற்பவரே
முதுமையில் அணங்காய்
புதுமுகம் காட்டுவார்.

அல்லாசாமி இயேசு சாமி
தவிர பிற எல்லா சாமிக்கும்
துணை இருக்கிறதென
துணையை பிரிந்து
துவளும் மனதுடையோர்
இக்கரையில் பலரும்

மெல்லவும் முடியாமல்
விழுங்கவும் முடியாமல்
சொல்லவும் முடியாமல்
துணையால் தண்டிக்கப்படும்
தூய அன்புடையோர்
அக்கரையில் சிலரும்

இப்படி மாறி மாறி
ஒருவரை ஒருவர் பார்த்து விட்டு
இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்றால்
எக்கரையிலும் பச்சை இல்லை
என்பதே உண்மை..

பச்சையாகச் சொன்னால்
அந்தப் பச்சைப் பகுதிக்கு
எவன் சிவப்பு விளக்குப்
பகுதி எனப் பெயரிட்டான்.
பச்சைப் பொய்காரன்
அவன் மட்டும்தானா?

**தா. ஜோ. ஜூலியஸ்**

## பாலியம்

சிறு வயதில் கோடைக்காலத்தில்
சூரி பழம் விற்பவளிடம்
நுகர்வது ஒரு பிரியம்
இத் தருணத்தில் அவளின் ஓசைபோல்
எத்தனையோ ஓசை கேட்டாலும்
என் நினைவுமுழுவதும் நுகர்ந்து
அசைபோட்டு கொண்டு இருக்கிறது
குழந்தைப்பருவம்

**புன்னகை பூ ஜெயக்குமார்**

ஒரு ஊர்ல
எனத் தொடங்கும்
அவளுக்கு...

வயிறு புடைத்து
லேசாய் மேல்
எழும்புமாம்...

பாலூறிய மாரிரண்டும்
சிறிது கனக்குமாம்...

அல்லைக்கு கீழாய் பிஞ்சு
காலிரண்டும் இடித்து தள்ளுமாம்....

பச்ச மாங்காயும்
சுட்ட சாம்பலும்
ருசிக்க தோணுமாம்....

ஒரு கட்டத்தில்
பீறிட்டெழுந்த வலியால்
வெளியாகும் சிசுவை
குட்டிமாவென்றே
அழைப்பாளாமென

கதை முடித்து
மடி சாயும் அவள்
தாய்மையற்றவளும் அல்ல
மடி சாய்க்கும் அவன்
ஆண்மையற்றவனும் அல்ல...

இரண்டையும் உணரப் போகிறவர்கள்
அவளுக்கு அவனாய்
அவனுக்கு அவளாய்
சொல்லிக் கொள்ளும்
கிடைக்கும் போது கிடைக்கட்டுமென்ற
ஆறுதல் வார்த்தையில்...

**ஷீலாசிவகுமார்**



# இரவின் குழந்தை

இரவாகிவிட்டது,
அம்மா முகம் வாடிவிடக்
கூடாதென்ற நேச மீள்மையோடு

வலது கரத்தில் வாங்கிய
அன்னக் கோப்பையை
இடது கரத்தில் ஏந்தியவாறே
வயிற்றுக் குடலின் அகோரமான
பசி இரைச்சலை மெது மெதுவாக
மௌனமுற செய்தேன்..

அம்மா மனம் மகிழ்ச்சியில்
சுடர் ஏற்றி மிளிர்ந்தது
இனி புத்திக்கு புலப்பட்டாத
அணு யாத்திரை சிதறல்களை
ஒன்று திரட்டி ஒரு விந்து நெய்வேன்

அதை இரவின் கருப்பைதனில்
கருவுற செய்வேன்
இரவுகளை இரைச்சலிடாமல்
இரவாகவே காக்க வேண்டியது
என் கடமை ஆதலால்,

மௌன கரங்களால்;
மௌன சொற்களால்;
மௌன மொழிகளால்;

இந்த இரவையும் நான் அழகாக்கப் போகிறேன்

உங்கள் பார்வைக்கு இவ்விரவு ஊடலாக தெரியலாம் ஊமையாக தெரியலாம் ஊனமாக தெரியலாம் இரவின் மார்பினில் துயர் துறந்து மனம் கசிந்து அமுதருந்தும் சேய் அல்லவா நான்.!

**சிவபெருமாள் கிருஷ்ணன்**

மௌனமே உன் உடையென அணிந்திருக்கிறாய் கழட்டவும் முடியாமல் கசக்கவும் முடியாமல் இரண்டாம் கட்ட நிலையையில் இக்காதல் என்ன செய்ய போகிறது?

ஒன்றுக்கும் உதவாத முத்த ஸ்மைலிகளால் கண்கள் மட்டுமே ஈரமாகிறது உதடுகளை குறித்தோ உணர்வுகளைக் குறித்தோ கவலை ஏதுமில்லை தானே உனக்கு?

வருகிறாய் போகிறாய் பச்சைக் கொடி காட்டியும் சிவப்பு விளக்கில் சிக்கிக் கொண்டிருக்கிறாய் நீ

உன்செல்ல விலங்குக்குத் தலை கோதுவது போலவே என்னை பாவித்து இக்காலத்தைக் கடத்தி விட்டேன்

விரக்தியின் கன்னத்தில் வெள்ளை தாடி முளைத்திருக்கிறது தொட்டுப் பார் அவை என்னிடம் வளரக் கூடியவை வேற்றுப் பாலால் உனக்கு வளர்கிறது அவ்வளவு தான்

**ஸ்டெல்லா தமிழரசி ர**

பன்னிரு கைகளென..
கோர நகங்களென..
கோரைப் பற்களென..
கோபம் கொள்கிறது மனம்...
என்னை நானே ஆத்திரத்தின் உச்சியில் ஆழ்த்தி
பின் ஒடிந்து வீழ்கிறேன்...
உங்கள் வெறுப்பின் மீதொரு மேடை அமைத்து
ஆனந்த தாண்டவம் ஒன்றை அரங்கேற்ற
ஆசை எனக்கு...
உங்கள் நம்பிக்கைகள் எனக்கு
நம்பிக்கையற்று போன கணத்தில்...
உங்கள் வெறுப்பையோ..
உங்கள் ஆணவத்தையோ..
மோதி மிதித்துவிடும் துணிவிருக்கிறது எனக்கு...
நீங்கள் பரம்பரை பாரம்பரியம் கௌரவம் கலாச்சாரம் எனும்...
அடையாளம் பூண்டு வருகிறீர்கள்..
எனக்கு நம்பிக்கையில்லா வரலாறு ஒன்றை சொல்கிறீர்கள்...
உங்கள் கட்டுப்பாடுகளை சீர்வரிசையென
என் கையில் திணிக்கின்றீர்கள்...
நம் விருப்பங்கள் எதிரெதிர் துருவங்களாய் நின்றதில்...
என் வயது உங்களுக்கும்
உங்கள் வயது எனக்கும்
பாரமாய் தெரிகிறது..

**வித்யா சிவலிங்கம்**



உங்களைப் பொறுத்து..
எல்லாம் நல்லபடியாய்ப் போகிறது
எதிர்நிகழ்வுகள் எதுவுமே இல்லை
நிகழ்பவை, எதிரானவையே அல்ல.

தழுவல்கள்
தலையாட்டல்கள்
வளைந்து கொடுத்தல்
வாய்மூடி இருத்தல் என
பொழுது போகிறது தன் போக்கில்.

எதற்காகவும்
வெட்கப்படாதிருப்பதற்கான
இலவசப் பயிற்சியை
எங்கோ யாரோ
ரகசியமாக வழங்குகிறார்கள்.

அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன
சூளைக்குச் சூளை
பச்சைக் கற்கள்.
நீங்களே, கொள்ளி வைத்து
எடுத்துக் கொள்ளுங்கள்...
சமாதி கட்டிவிட்டால்
எல்லா சங்கடங்களும் தீர்ந்துவிடும்.

**மா. காளிதாஸ்**

சிதறிக் கிடந்தன
பெரு மண்டபத்தில் உடல்கள்..
அனலில் இட்ட மெழுகாய்
ஆகிக்கொண்டிருந்தது
உடலிலிருந்து
இரத்த ஊற்றுக்கள்!
பார்த்த கேட்ட மனங்களில்
பேரிடியென
பதற்றத்தாக்குதல்!
சில அசுத்த ஆவிகள்
அடுத்த திட்டத்தை
வகுக்க ஆரம்பித்திருக்கும்!

**அகத்தின் அழகு (ரெஜி)**

ஐந்து வயது அழகிக்கு
உயிரெழுத்துகள் சொன்னேன்..
ஐ என்றால் என்னென்றாள்
உன்னைப்போல் அழகு என்றேன்..
ம்ஹூம் அம்மாவைப்போல் என்றாள்..
அம்மா எங்கே என்றேன்
வானில் நிலவைக்காட்டினாள்..
அம்மா அங்கேதான் இருக்கிறார்
அப்பா தினம் அம்மாவைக்காட்டித்தான்
சோறூட்டுவார் என்றாள்
நிலவு முன்னைவிட அழகாய் இருந்தது..

**பவானி**

# கொடுக்கி

எப்போதும் கெட்ட வார்த்தைகளைப் பேசும் 'சாந்தி'அக்காவிற்கு
'கொடுக்கி'என்று பெயர் வைத்திருந்தது ஊர்

ஐந்தரை மணிக்கு பால்காரனிடம் தொடங்கும் வார்த்தைகள்
இரவுகளில் இன்னும் மெருகேறும்

பூப்பு எய்துவதற்கு முன்
அம்மாவை இழந்திருந்த அவள்
பொறுப்பில்லாமல் தினமும் குடித்துவிட்டு வரும் அப்பாவைத்தான்
முதலில் திட்டத் தொடங்கினாளாம்

அதன்பிறகு காதலிப்பதாக ஏமாற்றிய 'பாண்டி' அண்ணாவை

கிண்டல் செய்யும் இளசுகளை

சினிமாப் பாடல்களை கேட்கும்போது அந்த கதாநாயகர்களை

சில மாதங்களுக்கு முன் அப்பாவையும் இழந்த நாற்பதுகளை
நெருங்கிய அவள்
இப்போதெல்லாம் இரவு நேரங்களில் தனியாக வெகுநேரம்
பேசிக்கொண்டேயிருக்கிறாள் நிறைய கெட்ட வார்த்தைகளை

அவள் தினமும் முத்தமிட்டு,சோறிட்டு வளர்க்கும் நாய்க்குட்டி
'ஜிம்மி'க்கு மட்டும் என்றுமே கொடுக்கியாக இல்லை
என்பது ஏனோ
ஊருக்குப் புரியவேயில்லை

அகதா



நடேசய்யர் தவறிபோனார்
வருணாசிரமத்தை வாழ்க்கையாய் கொண்டவர் அவர்
துட்டைதவிர மற்ற எல்லாவற்றிலும்
தீட்டு பார்ப்பவர் அவர்
ஆச்சாரமானவர் என்பதில் எந்த
ஆச்சரியமுமில்லை
சூத்திரக்கூட்டம்
தலைப்பிள்ளையின்
தலைமயிரை சிரைக்கயில்
அவர் சிதையை புதைக்கயில்
மேளதாளமிட்டு இசைக்கயில்
எந்ததீட்டும் அவரை சுட்டுவிடவில்லை
நடேசய்யர் மயாணபயணத்தை துவங்க
நாதஸ்வரம் ஒலித்தபடி முன் சென்றது
"ஒன்றே குலமென்று பாடுவோம்" என்றபடி

**கவிப்பிரியன் ஜீவா**

கதை கேட்ட பொம்மையும்
கதை சொன்ன குழந்தையும்
தோள்சாய்ந்து தூங்குகிறது..
அவர்களிருவரும்
எழுவதற்காகத்தான்
கொட்டக் கொட்ட
விழித்திருக்கிறது
சொல்லப்பட்ட கதை..

**மஞ்சு விஸ்வநாதன்**

ஆன்ம ஒளி ஏந்தியே
ஆழக்கடல்மரக்கலமொன்றில்
மீன்வலை விரித்து
மிதந்து சென்றேன்

மையிட்ட விழிநீர்பெருக லாந்தர்
தூக்கிப்பிடித்து புயல்கூண்டின்
மூன்றாம்சின்னத்து
எச்சரிக்கை அருகில் அவள்

சேதுக்கரை பூமியோரம்
சேர்ந்துருமோ சத உடம்பு
உப்புக்காற்று கருவாடாக
காய்ந்து போகுமோ- கச்சத்தீவு
அலையே தோட்டா துளைத்த படகே

சேத்துரு என்உடல சேதுகரையோரம்.

**மதுரை சிக்கந்தர் (அகோரன்)**

எப்போதாவது
நான்
நானாக இருக்கிறேன்
அப்போதெல்லாம்
யாருக்கும்
அடையாளம் தெரிவதில்லை
என்னை.

**க. மகுடபதி**

நானோர் ஓவியனைக் காதலித்துக் கொண்டிருந்த
காலமது
அவனது வண்ணங்களில்
என்னை வெளிப்படுத்தியும்
என் கன்னங்களில்
அவன் வரைந்தும் கொண்டிருந்த காலமது

காலமது காலனாகிப்போனபொழுது

தீட்டியதெல்லாம் ஓவியம்
என நான் நம்புகையில்
அது சுவரில்லாத சித்திரம் என்றான்

அவலன் விரல்களில் மாயமிருந்தது
என்றிருந்த என் நம்பிக்கை
அவனே ஒரு மாயாவி என்பதை நம்ப மறுத்தது

அவனும் வருகிறான்
இன்று வரை வரைகிறேன் என
யார் வந்தாலும்...

**லதா நாகராஜன்**



எல்லா சாதி மயிரையும்
அப்புறப்படுத்தி கொண்டு இருக்கின்றனர்
அழகு நிலையங்களில்

**சாண்டில்யன் விவேகானந்தன்**

கண்ணெதிரே
உன் வார்த்தைச் சவங்கள் அடுக்கப்பட்ட
சவப் பெட்டிகள்.
உயிருட்டவும் வழியில்லை.
தகனம் செய்யவும் மனமில்லை.
என்ன செய்வது உன் பழைய கடிதங்களை?

**ஜி.சிவக்குமார்**

பூனையின் நகங்கள் முளைத்த நாவினால் நான் தினமும்
ஆசிர்வதிக்கப்படுகிறேன்..
எனது உடல்,
சுவரில் வீசப்பட்ட முட்டையாய் கிழிந்து
நீள்வதை உனது பரிசுத்த மூக்கில் முகரும்
அனுமதியை புதைத்துக்கொண்டாய் நீ..
உனது காதோரம் ஒட்டியிருக்கும் எனது விழிச்சதையை சற்று
உதிர்த்துவிடு,
உனைக்கொல்லும் ஓநாய்களை நான் பெற்றெடுக்க வேண்டும்..
சமூகம்

**வீ.பூமிஜீவன்**

கிரகப்பிரவேசத்திற்கு
முன்பே குடிபுகுந்து விட்டது
கடன்

**ஆனந்த் ஆனந்த்**

மூடிய விழிகளைத் தாண்டி துளைக்கின்றது
குத்திட்ட பார்வை அசைவற்ற முகத்தில்
உறைந்து கிடக்கிறது புன்னகை.

சொல்லொணாப் பதற்றங்கள் நிறைக்கின்றன என்னை,
அறையின் கதவுகளுக்குப் பின்னால் பத்திரமாய்ப்
பதுக்கிவைத்திருக்கிறேன் குருதியில் தோய்ந்த கத்திகளை,
உதிரத்தின் நெடியோடு !

**ரா.த.ஜீவித்தா**

## விட்டு விடுதலையாகி

இகபர சுகங்களால் இழைத்து இழைத்து
இற்றிடும் இவ்வுடல் இளைத்து இளைத்து
சுகமென விடுதலை யானதே ஆன்மா!

இருண்ட கூண்டினில் உருண்ட உளமது
இற்ற விலங்கினை உடைத்து நொறுக்கிட
விரித்த சிறகினால் பறந்தது மனமே!

**கு. கமலசரஸ்வதி**